**செ. கு. எண்**: 390 **நாள்**: 04.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.11.2012

24.10.2012 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகே சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது அரசுப் பேருந்து மோதியதில், ஆட்டோவில் பயணம் செய்த சென்னை, பாடியைச் சேர்ந்த திரு. ஜெயசீலன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

31.10.2012 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் திருப்பூரிலிருந்து மேட்டுப்பாளையம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, கோத்தகிரியிலிருந்து ஈரோடு சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தின் மீது மோதியதில் திருப்பூர் மாவட்டம், கருவலூரைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரின் மனைவி திருமதி ருக்மணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திருமதி ஜெயசீலன் மற்றும் திருமதி ருக்மணி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் ஆட்டோவில் பயணம் செய்த இருவர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இருவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. ஜெயசீலன் மற்றும் திருமதி ருக்மணி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் காயமடைந்த இருவருக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**